நிர்ணயிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், சில பகுதிகளிலே தையல் தொழிலாளர்கள் ஒரு மூட்டைக்குத் தையல் கூலி இவ்வளவு என்று நிர்ணயம் செய்துகொண்டு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மாதச் சம்பளத்திற்கு வரச் சொன்னால் வராமல் இருக்கிறார்கள். அவர்களை மாதச் சம்பளத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு முன்வராது.

விளாத்திகுளம் தொகுதி மேல்மாந்தை பிரிமியர் சால்ட் ஒர்க்ஸ் தொழிற்சாலை

421—(* வினா எண் 11578) திரு. சு. குமரகுருபர ராமநாதன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியிலுள்ள மேல்மாந்தையில் பிரிமீயர் சால்ட் ஒர்க்ஸ் தொழிற்சாலையில் 22 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டு இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி தொழிலாளர் அலுவலர் மூலமாக வேலைநீக்கம் தொடர்பாக 22 தொழிலாளர்களையும் தனித்தனி யாகவோ அல்லது தொழிற்சங்கம் மூலமாகவோ தாவா எழுப்பும்படி ஆலோசனை வழங்கியும் இந்நாள் வரை முறையாக தொழிற்தாவா எழுப்பப்படாததால் 22 தொழிலாளர்கள் வேலை நீக்கம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS